## இரண்டு வார்த்தை

எந்த ஒரு செயலுக்கும் குரு அவசியமானவர் ஆகிறார். தான்தோன்றித்தனமாக செய்யும் எந்த ஒரு காரியமும் வெற்றி பெற்றதில்லை.

விஞ்ஞானிகள், மேதைகள் கூட, முன்னர் நடந்த சரித்திர வரலாறு மற்றும் சான்றோர்களின் கோட்பாடுகளை கவனித்து செயலில் இறங்குகின்றனர்.

தனக்குத் தோன்றியதெல்லாம் சரியாகிவிடாது. சரி என்று செய்யும் செயல்கள் வீணாகிப் போகும்.

வெறும் உபதேசம், மற்றும் மந்திரத்தைப் போதிப்பவர் அல்ல குரு.

மனிதத் தன்மையை, மானுடத்தை உணர்த்துபவர் குரு.

குணங்களை, குணத்தின் செயல்களை உணர்த்துபவர் குரு.

புத்தியைத் தூண்டி விடுபவர் குரு.

கேள்வியைக் கேட்கும்படியான அறிவைத் தூண்டி கேள்விக்கு விடையைத் தருபவர் குரு.

தட்டித்தட்டி தங்கத்தை ஆபரணம் ஆக்குவது போல் சீடனை உயர்நிலைக்கு எடுத்துச் செல்பவர் குரு.

தவறு செய்கிறபோதெல்லாம் அதை சுட்டிக்காட்டி மேலும் தவறு செய்யாமல் தடுப்பவர் குரு.

மந்த புத்தியோடு இருக்கும்போது சுறுசுறுப்பை உண்டாக்குபவர் குரு.

தெளிவு பிறக்காமல் மனது உலாவும்போது மனத் தெளிவை அருள்பவர் குரு.

அவ்வப்போது கர்வம் தலைதூக்கும்; அதை சரியான நேரத்தில் அடக்குபவர் குரு.

தனக்கெல்லாம் தெரிந்துவிட்டது என ஆணவம் கொள்ளும் போது, அமைதியாக, இது கூடாது என செம்மையாக்குபவர் குரு.

தற்பெருமை அடித்துக் கொண்டு தலைகால் தெரியாமல் ஆடும்போது, தகாது இது உனக்கு என அதை தடுத்து நிறுத்துபவர் குரு.

சகல புராணத்தால் ஏற்படும் அறிவை சில வார்த்தைகளால் தத்துவமாக கூறி உணர்த்துபவர் குரு.

மந்திர சித்தி நிலையை தகுந்த நேரத்தில் அருளி மேல்நிலையை காட்டுபவர் குரு.

ஆதாரமில்லாத வாழ்க்கையில், மூலாதாரம், மேலாதாரம் காட்டுபவர் குரு.

பேசாமல் பேசி சுகம் பெறும் காலம் சொல்லுபவர் குரு.

நிலையான மோட்சத்தை அடைய நிலையில்லாத உடம்பு தேவை என கூறுபவர் குரு.

அன்பு, கண்டிப்பு, கட்டளை, பொறுமை, கொடை, தயை, ஆகர்ஷணம், சத்தியம், தர்மம், இவற்றின் மொத்த உருவம் குரு.

குருவை அறிந்தவரே ஞானிகள். குரு தத்துவம் அறிந்த வர்களே பெருமைக்குரியவர்கள்.

'ஸ்பர்சமணி என்ற அபூர்வமணியானது இரும்பைத் தங்கமாக்கும். ஸ்பர்சமணி இரும்பைத் தங்கமாக்குமே ஒழிய ஸபர்சமணியானது இரும்பை ஸ்பர்சமணியாக மாற்ற முடியாது. ஆனால் குருவானர் தன்னை விடவும் சீடனை உயர்த்தி காட்டுபவர். அதனால் ஸபர்சமணியைக் கூட உபமானமாக காட்ட முடியாது'' என்று ஆதிசங்கரர் சொல்லுகிறார்.

குரு என்பவர் மனித உடம்பு போர்த்திக் கொண்ட தெய்வமே யாவார்.

தெய்வமாக இருந்து உபதேசித்தால் கேட்கமாட்டான் அர்ஜூனன் என்று ஆச்சார்யானாக இருந்து கீதையை அருளினார் கிருஷ்ணர்.

குருவின் பெருமையை அறியாமல், உணராமல் இன்று பலர் பள்ளத்தில் விழுகின்றனர். குருவின் பேச்சைக் கேட்காமல் பின் ஐயோ, அவர் பேச்சைக் கேட்காமல் போனோமே என்று வருந்துகின்றனர் சிலர்.

குரு - மானுட வர்க்கத்திற்கு தேவையான வழிகாட்டி.

குருவின் பாதங்களைத் தொழுதல் - இது பலருக்குக் கிடைக்காது.

கிடைத்துவிட்டால் அதை விடக்கூடாது. பாத பூஜை - பரம பவித்தரமானது.

குருவின் வஸ்திரங்களை சீர்செய்தல் - இந்த ஜென்மாவை புனிதமாக்கும்.

குருவுக்கு தக்க நேரத்தில், அவர் விரும்பும் சமயத்தில் உணவளித்தல் - வாழ்வில் செல்வத்தை அளிக்கும்.

குருவுக்கு எப்போதும் ஸேவை செய்தல் தெய்வத்தை நேரில் காண வைக்கும்.

குருவுக்கு எதிராக எதுவும் செய்யாதிருத்தல், புண்ணியத்தைத் தரும்.

குருவுக்கு தெரியாது செய்தல், குருவை மீறுதல், குருவை அவமதித்தல், அவரை தூஷித்தல் குருவின் மனது புண்படும்படி செய்தல் இந்த பாபத்திற்கு விமோசனமே இல்லை.

குருவின் - விருப்பம் - பூர்த்தி செய்தல் ஆனந்த வாழ்வைத் தரும்.

குருவை ஆராதித்தல் - ஸர்வ தெய்வாராதனத்திற்கு சமம்.

ஏன் குருவைப்பற்றி இவ்வளவும் எழுதவேண்டும்? எழுதியாகவேண்டும் என்ற காரணத்தால் எழுதப்பட்டது.

குருவைப்பற்றி நிறைய தெரிந்திருந்தாலும் இன்னும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதினால் எழுதப்பட்டது.

குருவைப்பற்றி, அந்த தத்துவத்தைப் பற்றி எழுதவோ உணர்த்தவோ முடியாது. ஏனெனில் அந்த பரானந்தத்தில் எத்தனைபேர் மூழ்கி விடமுடியும்?

பூர்வ ஜென்ம ஸுக்ருதம் - அந்த பாக்கியத்தை அருளும்.

இன்று குரு இருக்கும்போதே - குருவை மிஞ்சுகிறார்கள், ஏசுகிறார்கள், அவதூறு பேசுகிறார்கள், அவர் சொல்லாததை சொல்லுகிறார்கள், அவர் உத்தரவு தராததை செய்கிறார்கள், அவர் காட்டாத வித்தையை உபயோகிக்கிறார்கள். பலர் தவறான பாதையில் செல்கிறார்கள். சரியான குரு இருந்தும் கூட ஏன் இப்படி நடக்கிறார்கள்? இது புராண காலத்திலிருந்தே வருகிறது.

குருவை மிஞ்சிவிட வேண்டும். அவரைவிட பேர் வாங்க வேண்டும். குருவை விட நமக்கு எல்லாம் தெரியுமே. குரு கொஞ்சம்தானே சொல்லிக் கொடுத்தார், நமக்கே தெரிந்தது ஏராளம் என்று குருவிடமே தான் கற்ற பாடத்தை சொல்லிக் காட்டுவார்கள்.

அடடா இது அத்தனையும் குரு கடாக்ஷமாயிற்றே என்று நினையாமல் மார்தட்டிக் கொள்வார்கள். பின் குப்புற விழுந்தவுடன், துணை கொள்ள குருவைத் தேடுவார்கள்.

குருவின் எளிமை வராது, குருவின் அடக்கம் வராது, குருவின் அருள் வராது, குருவின் தயை வராது, ஆனால் பெருமை புகழ் யாவும் வர வேண்டுமென எண்ணுவார்கள்.

குரு கற்றுக்கொடுத்த பூஜை, மந்திரம் இவற்றை வைத்து பணம் சம்பாதிக்க நினைக்கிறார்கள்.

குரு செய்த தவத்தை தான் செய்ய முற்படுவதில்லை.

குருவுக்கு கிடைத்த காணிக்கையை பெரிதாய் எண்ணுகிறார்கள்.

காணிக்கை, பேர், புகழ், பெருமை - இதையெல்லாம் துச்சமாக நினைப்பவர் குரு என்பதை தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

அதனால்தான் இத்தனையும் எழுத வேண்டி வந்தது.

குருவுக்கு கிடைக்கிற மோட்சமானது, குருவுக்கு உதவியாயிருக்கிற, சேவை செய்கிற அத்தனை சீடர்களுக்கும் கிடைக்கும் என்பது சான்றோர்களின் வாக்கு.

குரு என்பவர் யார்? தத்துவம் யாது? சிறப்புக்குரிய குரு வழிபாடு என்பது யாது? குரு பூஜை மகத்துவம்; குரு பூஜை குரு விளக்கம், யாவும் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் அவ்வப்போது மலர்ந்தருளிய அமுதை திரட்டி இங்கே புத்தமாக தந்துள்ளோம்.

பலருக்கு கட்டாயம் இந்த புத்தகம் உதவும்! குருவைப் போற்றுங்கள்! குருவின் பாதகமலங்களை அர்ச்சியுங்கள்! குருவின் உருவை தியானம் செய்யுங்கள்! குருவின் பெருமையை பேசுவதால் நாம் உயர்கிறோம்! குருவை நேசியுங்கள்! குருவின் வார்த்தையை காது கொடுத்துக் கேளுங்கள்! குருவின் நாமத்தைப் போற்றுங்கள்! அவரது நாமம் நம்மை தூய்மையாக்கும்! அவரது அருள் நம் வாழ்வை சிறக்கச் செய்யும்!

அவரது ஞான வெளிச்சம் நம் மன இருட்டைப் போக்கும்!

அவரது அருள் பிரகாசம் நம் இல்லத்தில் பரவி செல்வத்தைக் கொழிக்க செய்யும்.

**பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி**
**ஸ்வாமிகளின் திருவடியில்,**
**ஸ்வாமி பரத்வாஜ்.**